நாள்-18-02-2021 OS.No.76/2016 வா.சா.1 அருள்செல்வி

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு கு.வி செய்ய அனுமதிக்கப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி-

எனது வழக்கில் அ . பரிகாரமாக என்ன கேட்டுள்ளேன் என்றால் சொத்திற்காக நான் வழக்கு தாக்கல் செய்தேன் . 2 பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் புரியவில்லை. என்னிடம் காட்டப்படும் பிராதில் அ பரிகாரம் மற்றும் ஆ பரிகாரத்தை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் . அ பரிகாரமாக ரூ.7 லட்சம் தொகையை வட்டியுடன் செலுத்துமாறு கேட்டுள்ளேன் என்றால் சரிதான் . நான் இடத்தைதான் கேட்டுள்ளேன் . நான் கிரைய ஒப்பந்தம் போட்டுதாக தவறாகசொன்னேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து 1979 ம் ஆண்டு கிரைய ஆவணத்தின்படி பாத்தியம் என்றால் சரிதான் . 1979 ம் ஆண்டிலிருந்து பிரதிவாதிகள் அங்கு வீடு கட்டி குடியிருந்து வருகிறார்க்ள் என்றால் சரிதான் . பிரதிவாதிகள் பலமுறை தபசில் சொத்தை வங்கியில் வைத்து தனது 6 பிள்ளைகளை வளர்த்து வங்கியில் உள்ள கடனை அடைத்தும் வந்தார்கள் என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது . ஆனால் நான் கடன் கொடுத்த சமயத்தில் தபசில் சொத்து பாண்டியன் கிராம வங்கியில் இருந்தது . நான் வீடு வாங்க பணம் கொடுத் சமயத்தில் தபசில் சொத்து பத்திரம் மேற்படி வங்கியில் இருந்தது. பிரதிவாதியின் மகள்கிருஷ்ணவேனி என்பவர் எனது வீட்டில் வாடகைக்கு இருந்தார் என்றால் சரிதான் . அவரது கணவர் பெயர் சந்திரன் என்றால் சரிதான் . என் வீட்டில் கதவு எண் .64 எ கீழசண்முகபுரத்தில் கிருஷ்ணவேனி ஒத்திக்கு இருந்தார் என்றால் சரிதான் . ஒத்தி பணம் 1 ½ லட்சம் கிருஷ்ணவேணி கொடுத்திருந்தார் என்றால் சரிதான் . மேற்படி சந்திரன் அவரு மனைவி கிருஷ்ணவேனி எனது வீட்டில் 2011 வரை குடும்பத்துடன் தங்கியிருந்தார் என்றால் சரிதான். சந்திரன் லாரி புக்கிங் தொழில் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது . அவர் லாரி பிசினஸ் தொழில் செய்து வரும் போது சந்திரன் என்பவருக்கு மணிகண்டன் என்பவர் பழக்கமாகி அவரது தொழில்

சம்பந்தமாக காசோலை முன்பணம் கொடுப்பதற்கு என்னிடம் மணிகண்டனை சந்திரன் அறிமுகம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. நான் மணிகண்டனுக்கு காசோலை பெற்றுக்கொண்டு கடன் கொடுத்தேன் என்றால் அவ்வாறு எதுவும் கிடையாது. மணிகண்டனுக்கு நான் ஏறத்தாழ ரூ .6 லட்சம் வரை கடன் கொடுத்திருந்தேன் என்றாலும் செப்டம்பர் மாதம் 5ம் தேதி மணிகண்டன் ஊரை விட்டு தலைமறைவாகி விட்டார் என்றாலும் அந்த பணத்தை சந்திரனிடம் கேட்டு அடி ஆட்கள் வைத்து அடித்து மிரட்டி வீட்டு கதவை பூட்டி ரூபாய் கொடுத்தால்தான் வெளியில் விடுவேன் என்று மிரட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. இவர் கூறுவதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை . சந்திரன் மீது கொலை மிரட்டல் விடுத்தேன் என்றாலும் அவர் ஜனவரி 12ந் தேதி அவரரு மாமனாரிடம் உதவி கேட்டார் என்றாலும் அவரது மாமனார் எனது வீட்டிற்கு வந்ததால் நான் எழுதி வாங்கிவிட்டேன் என்றாலும் சரியல்ல . கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல . கிரைய ஒப்பந்தத்தை நான் மிரட்டி எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல . ஏற்கனவே பிரதிவாதிகள் பலமுறை தபசில் சொத்தினை அடமானம் வைத்து திருப்பி உள்ள நிலையில் அதை விற்பதற்கு எவ்வித அவசியமும் இல்லை என்றால் சரியல்ல . பிரதிவாதிகளுக்கு 12/01/14 க்கு முன்பு வரை என்னை யார் என்றே தெரியாது என்றாலும் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே பணபரிமாற்றம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல . கிரைய ஒப்பந்தத்தில் எந்தவித பணபரிமாற்றம் நடைபெறாததால் ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தின் உண்மையான சந்தை மதிப்பும், அரசு வழிகாட்டும் மதிப்பும் கிரைய ஒப்பந்த காலத்தில் பல மடங்கு அதிகமானது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த தொகையை பார்க்கும்போது நியாயமில்லாத பரிவர்த்தனை என்றும் பயமுறுத்தி நிர்பந்தபடுத்தி வாங்கப்பட்டது என்றும் துலங்கும் என்றால் சரியல்ல . கிரைய ஒப்பந்தம் சட்டவிரோதமானது தெரிந்துதான் நான் 2 வது பரிகாரத்தை என் பிராதில் வைத்துள்ளேன் என்றால்

சரியல்ல. மாற்று பரிகாரம் கோரும்போது நான் சட்டவிரோதமான கிரைய ஒப்பந்த்தை மறைப்பதற்காக மாற்று பரிகாரம் கோரினேன் என்றால் சரியல்ல . நான் சமூக நீதிமன்றத்தை சுத்தமாக கரங்களுடன் அணுகவில்லை என்றாலும் பொய்யான விபரங்களை கூறி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல . வட்டி பெறுவதற்காக நான் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல . நான் சமத்துவ மக்கள் கட்சியில் மகளிர் அணியிசெயலரளராக இருந்தேன் என்றால் நான் தற்போது இல்லை . என் கணவர் என்னை சேர்த்துவிட்டதால் நான் மகளிர் அணியில் செயலாளராக இருந்தேன் . மேற்கண்ட சம்பவம் நடைபெறும் காலத்தில் செயலாளராக இருந்தேன் என்றால் எனக்கு வருடம் ஞாபகம் இல்லை. சமத்துவ மக்கள் கட்சியில் உள்ள நபர்களுக்கு நான் வட்டிக்கு பணம் கொடுத்து வாங்கினேன் என்றால் சரியல்ல . என் வீட்டின் அருகில் மகேஸ்வரி, பரமேஸ்வரி, மாலா என்பவர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்து வாங்கியுளளேன் என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது . நான் வட்டி பணத்திற்காக வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.